(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | | |
|---|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | } | CC.No. 122/ 2020 |

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW–8

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் |
| த/பெ | : | சிவசங்கரபாண்டியன் |
| கிராமம் | : | பாளையங்கோட்டை |
| வட்டம் | : | பாளையங்கோட்டை |
| வயது | : | 63 |

**(1 வது எதிரி ஆஜர்)**

2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை :–**

1) நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். இதற்கு முன்பு ராதாபுரம் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது காவல் நிலைய குற்ற எண்.83/2016 இதச சட்டப்பிரிவுகள் 452, 294(பி), 323, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு 03.05.2016 அன்று 13.30 மணிக்கு சம்பவ இடம்சென்று சாட்சிகள் ராமலெட்சுமி, முத்துசெல்வன் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **பார்வைமகஜர் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5,6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2)** பின்னர் சாட்சிகள் லெட்சுமி, செல்வி, தில்லைஅரசி, ஐயம்மாள், சுரேஷ், ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கிருஷ்ணசாமி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளை தொடர்ந்து தேடி வந்த நிலையில் எதிரிகள் திருநெல்வேலி, மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்று சென்றுவிட்டார்கள்.

3) காயம் பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.அஜிதா ஜீவி என்பவரை விசாரணை செய்து காய சான்று பெற்றேன். அ,.சா,.1 க்கு ஏற்பட்ட காயம் சாதராண காயம் என்று சான்று வழங்கினார்,. அந்த காயச் சான்று **அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரிகள் மீதான குற்றம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 452, 294(பி), 323, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் 17.02.2017 அன்று குற்ற இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** – இல்லை(எதிரி ஆஜரில் இருந்தும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணைக்கு வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை).

(ஒம்.)திரு.மு.ஆனந்த்,பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் (ம)
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
இராதாபுரம்